இமாம் ஷாஃபி (ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

# செய்திமலர்

நவம்பர் 2021

மாணவர்களால் மாதந்தோறும் மலரும் மலர்

## மாதாந்திர ஹதீஸ்

ஒரு மனிதனின் இஸ்லாம் சிறப்பானது, நிறைவானது என்பது அவன் தனக்குத் தேவையற்றவைகளை விட்டுவிடுவதாகும்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

விளக்கம்:- இந்த ஹதீஸின் கருத்து, தேவையற்ற பொழுது போக்குகள், இணையதள விளையாட்டுகள், தெருச் சந்திப்புகள், அரட்டைகள், சமூகவலைதளங்கள் என நமது நேரத்தை செலவிடாமல், நமது ஈமானுடன் வாழ்வோமாக!




## நேரு எத்தகைய இந்தியாவை உருவாக்க விரும்பினார்?

இந்தியாவின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர் மாந்தருள் மாணிக்கம் "ஜவஹர்லால் நேரு". இவர் பிறந்த நாளைத் தான் "குழந்தைகள் தின விழா" என கொண்டாடி வருகிறோம்.

இந்தியாவை வல்லரசாக்கும் பொறுப்பு மாணவர் கையில் உள்ளது என்று முழக்கமிட்டவர் நேரு. சுதந்திரமான, ஒற்றுமையான, மதச்சார்பற்ற, ஜனநாயக நாடாக இந்தியாவை மாற்ற முனைந்தவர் நேரு. நேர மேலாண்மை, மக்களிடம் நெருங்கிப் பழகுவது போன்ற சிறப்பான பழக்கவழக்கங்கள் நேருவுக்கு இருந்தது.

நேருவை விட இந்தியாவின் ஜனநாயகத்தைக் காப்பதில் வேறு எவரும் சிறப்புடன் செயல்பட வில்லை. அவரே, வயது வந்த அனைவர்க்கும் வாக்குரிமைக்காக வாதாடினார்,ஆக்கப்பூர்வமாக செயல்படும் எதிர்க்கட்சிகளை வரவேற்றார் , அதிகார வர்க்கம் மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தில் அவர் தலையிட்டதே இல்லை.

இறக்குமதிக்கு மாற்றான பொருளாதார மாதிரியை கொண்டு வந்தார். வல்லுநராக,அரசியல்வாதியாக பல்வேறு தத்துவங்கள் மற்றும் வேறுபாடுகளை கடந்தவராக வாழ்ந்தவர் நேரு. எதிர்கால இந்தியாவின் மிக்க செல்வங்களான பிள்ளைகளிடம் அன்பு பாராட்டினார் எனவே, அவரது பிறந்த தினத்தை குழந்தைகள் தினமாக நாம் கொண்டாடுகிறோம்.

**மு.ஜுல்ஃபா(XI-C Bio)**

## புத்தகம்



புதுமையின் விடியல் புரட்சியின் கவிதை
பன்முக குவியல் படைப்பாளியின் பங்கீடு!
தலைமுறை தாண்டியும் தாகம் தீர்க்கும் வற்றாத நதி ...
நூலகத்தின் அகமே இதற்கு கிடைத்த பெட்டகம்

புண்பட்ட மனதிற்கு மருந்து போடும்....
அறிவுப் பசி வந்து விட்டால் விருந்தே போடும்.......
மயிலிறகாய் மாறி மனதை வருடி விடும்,,,,,
மௌனமாய் நமக்குள் பேசி நம்மை ஆளும்....!

புறப் போரை புகழ்ந்து சொல்லும்
அகப் போருக்கு அடிமையாக்கும்.....
நாடிப் படிப்பவரிடம் நவரசம் கொட்டும்!
நல்லதைச் சொல்லி நம்பிக்கை ஊட்டும்...... .

மெய்ப்பாட்டியல் இதனுள் அடக்கம்!
புதுமையை விரும்பும் புத்துணர்வாளன்!
இதை கையில் ஏந்தாத மானிடன் இல்லை
இதன் மதிப்பை உணராதவன் மனிதனும் இல்லை....

பிடித்து படித்தால் மெய் சிலிர்க்கும்.......
பொங்கும் உணர்வை பெருகிட வைக்கும்.....
புரியா கேள்விகளுக்கு விடையளிக்கும்
அனைத்து மொழிகளுக்கும் அடைக்கல வாசம்.............!

கற்றுத் தருவதில் கலங்கரை விளக்கம்.....
காலப் பதிவின் அடையாளமாய் விளக்கும்
மூடி இருக்கும் உணவு , வயிற்றுப் பசியை தீர்ப்பது போல,,,,,
மூடிக்கிடக்கும் புத்தகமும் அறிவு பசிக்கு அன்னமாகும் !

**சா.சமீஹா X Std**

# மின்னஞ்சலும் - தபால்பெட்டியும்




மின்னஞ்சல் : தபால்பெட்டியே! நீ நலமாக உள்ளாயா?

தபால் பெட்டி : ஆம், நான் நலமாக உள்ளேன்.
நீ அங்கு நலமா?

மின்னஞ்சல் : உன் வேலையைப் பற்றி சொல்.
பிறகு, நான் என் வேலையைப் பற்றி
சொல்கிறேன்.

தபால்பெட்டி : சரி, நண்பா! நான் முதலில் சொல்கிறேன்.
அந்தக் காலத்தில் என் பெட்டி நிறைந்திருக்கும்.

மின்னஞ்சல் : இந்த காலத்தில் என் பெட்டி நிறைந்திருக்கிறது.

தபால்பெட்டி : என் காலத்தில் எழுதுகோலும், கடிதத்தாளும்
வாங்கி எழுதுவார்கள். எல்லோருடைய கையெழுத்தும்
வாசகமும் நன்றாக இருக்கும்.



மின்னஞ்சல் : ஆமாம், இது அவசரக் காலமாகிவிட்டது. இப்பொழுது
தகவல்களைத் தட்டி விடுவதற்கு, நான் தான் உதவி
செய்கிறேன்.

தபால்பெட்டி : அப்படியா!

மின்னஞ்சல் : முன்பெல்லாம் உன் கடிதத்தைப் பெற மூன்று அல்லது
ஐந்து நாள் காத்திருக்க வேண்டும். இப்பொழுது,
நான் ஒரு நொடியில் அனுப்பி விடுகிறேன்.

தபால்பெட்டி : அப்படியா! இவ்வளவு வேகமாக செயல்படுகிறாயா?

மின்னஞ்சல் : ஆம்! காலத்தின் மாற்றத்தினால் விரைவாக
செயல்பட வேண்டியுள்ளது.

தபால்பெட்டி : சரி, நண்பா! காலம் மாறும் மக்கள் பழமையை
நாடி வரும்போது என்னை தேடி வருவர். வயதில்
பெரியோரை கேட்டுப் பார். கடிதத்தை எழுதுவதும்
எதிர்பார்ப்பதும் பலமுறை படித்து பரவசம் அடைவது
என்ன இன்பம் தரும் என்பதை உணர்த்துவார்கள்.

ஆர்.ஏ.யுசைரா IX STD

# அறிவு வளர துணையாக நிற்கும் கருவிகள்

அறிவு வளர முதலாய் இருப்பது
கல்வி எனும் கருவி - அந்த
கல்வி கற்க உதவும் புத்தகம் ஒரு கருவி

அருவியாய் சிந்தனை கொட்ட
காணொலி ஒரு கருவி

கற்பனை குருவி பறக்க வானொலி ஒரு கருவி
சிந்திப்பதற்கு பட காட்சிகள் ஒரு கருவி

கருவியாய் பல பொருட்கள்
நம் அறிவின் ஆழத்தை அளக்க உதவுமே!

ஊக்கமே வெற்றியின் கருவி!
கற்பனை ஆக்கத்தின் கருவி
செயல்பட விவேகம் ஒரு கருவி
வாழ்வை அறிய பகுத்தறிவு ஒரு கருவி!

கண்ணில் புலப்படாத ஞானமும் கருவிதான்
வல்லவனுக்கு புல்லும்
ஆயுதம் என்பது போல - அறிவாளிக்கு
சிறு புல்லும் ஒரு கருவிதான்!

மு.அஃப்ரா VII - C

நல்ல யுத்தியுள்ள கேள்விகளை
கேட்டு அறிவை வளர்த்திடுவோம்

நல்ல புத்தியுள்ள நூல்களை,
படித்து அறிவை வளர்த்திடுவோம்

நல்ல கருத்துள்ள காட்சிகளை,
பார்த்து அறிவை வளர்த்திடுவோம்

அறிவை வளர்க்க கல்வியின்றி
இவ்வுலகில் ஏதுமுண்டோ?

கற்றவர் வாழ்க்கை இனிக்கும்
கல்லாதவர் வாழ்க்கை கசக்கும்

மண்ணிலே தீட்டி ஏட்டிலே
எழுதி என்னை வளர்த்த அறிவுச்சுடரே!

திறமை ஒன்றே நம் வாழ்வின் இலக்காம்
அதனை வளர்ப்பதும் வார்ப்பதும்
அறிவின் இலக்காம்!

ஹ. அஜானா VI - C

# குழந்தைகள் தினத்தை எவ்வாறு கொண்டாட விரும்புகிறாய்?




குழந்தைகள் தினம், நவம்பர் 14 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.நமது முதல் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள், "குழந்தைகள் தினமாக" கொண்டாடப்படுகிறது.
அந்நாளில் பள்ளியில் இனிப்புகள் வழங்கி, ஆசிரியர்கள் வாழ்த்துகள் தெரிவிப்பர்.

குழந்தைகள் தினத்தன்று வண்ண உடைகள் அணிய வேண்டும். சீருடைகள் இல்லாமல் வண்ண உடைகள் அணிவது மகிழ்ச்சியாக இருக்கும். புத்தக கண் காட்சி, பொருள் காட்சி போன்ற கல்வி சார்ந்த சுற்றுலா செல்ல வேண்டும். வரலாற்று சிறப்புமிக்க இடங்களை காண வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களுடன் சுற்றுலா செல்வது மகிழ்ச்சியாக இருக்கும்.

அந்நாளில் களப்பணி ஆற்றி எல்லா குழந்தைகளுக்கும் தேவையானவற்றைக் கொடுத்து, அவர்கள் மகிழ்ச்சியாக இருக்க உதவி செய்ய வேண்டும்.பள்ளியில் குழந்தைகளுக்கான போட்டிகள் வைத்து, பரிசுகள் வழங்க வேண்டும்.மரக்கன்றுகளை அளித்து மரம் வளர்த்தலை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு, எமது பள்ளியில் குழந்தைகள் தினம் கொண்டாட வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

**மு.ஆயிஷா VIII STD**

## மாணவர்களின் வளர்ச்சியில் பள்ளியின் பங்கும் பள்ளியின் வளர்ச்சியில் மாணவர்களின் பங்கும்

ஆயிரம் சத்திரங்கள் கட்டுவதை விட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது சிறந்தது என பாரதியார் கூறியுள்ளார். ஆம்! கல்விச்சேவையே உலகில் மிகச் சிறந்த சேவையாகும். ஒரு குழந்தையை நல்வழிப்படுத்துபவர்கள் பெற்றோர் மற்றும்ஆசிரியர்கள். குழந்தைகள் பெற்றோர்களை விட பள்ளியில் தான், அன்றாட வாழ்வை அதிகம் செலவிடுகின்றனர். அதனை பயனுள்ளதாக மாற்றி கொடுக்க வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரின் கடமை ஆகும்.

ஒரு பள்ளியை உருவாக்குவது என்பது சாதாரணமான காரியமல்ல; நல்ல நிர்வாகம், சிறந்த ஆசிரியர்கள், தரமான கல்வி, பல்திறன் வளர்ப்பு, எளிதில் புரிந்து கொண்டு சாதிக்கும் மாணவர்கள் என பல்வேறு கோணங்களை உடையதாக இருக்க வேண்டும்.

நம்மைச் சுற்றியுள்ள ஏராளமான பள்ளிகளில் ஒரு சில பள்ளிகள் மட்டும் தான், நம் நினைவுக்கு வரும். அவ்வாறான மிகச் சிறந்த பள்ளி தான், எங்கள் இமாம் ஷஃபி (ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி. ஏனெனில், அமைதியான சூழலுடன் நிறைவான கல்வியை எங்கள் பள்ளி ஆசிரியர்கள் கற்று கொடுக்கின்றனர்.

தரமான கல்வியுடன் பள்ளியின் பெயரைச் சொல்லும்போது பெருமிதம் மேலோங்கி இருக்க வேண்டும். ஏனென்றால், கல்வி அறிவும் சுயமரியாதையும் பகுத்தறியும் தன்மையுமே, தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

அதுமட்டுமன்றி, இப்பள்ளியில் படித்த மாணவர்கள் அனைவரும் ஒவ்வொரு துறையிலும் சிறப்பான ஒரு இடத்தை பிடித்து வாழ்க்கையில் ஒரு உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். அதற்கு காரணம், படிக்கும் போதே இப்பள்ளி கல்வியுடன் நல்லொழுக்கம், மனிதப் பண்புள்ள நல்ல நடத்தைகள், ஆளுமை வளர்ச்சி எல்லாவற்றையும் ஊக்குவிக்கும் ஒரு பாடசாலையாக திகழ்கிறது.

இவ்வாறு சிறந்த பள்ளிக்கு உண்டான அனைத்து தகுதிகளையும் கொண்டு விளங்குகின்ற ஒரே பள்ளி எங்கள் இமாம் ஷாஃபி (ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி.ஒவ்வொரு ஆண்டும், இப்பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் பள்ளிக்கு வருகை தந்து, பள்ளியின் வளர்ச்சிக்கான உதவிகளை தானே முன் வந்து செய்யும் அளவிற்கு மாணவர்கள் மனதில் முக்கியமான இடத்தை பிடித்துள்ளது.

**ஷே. அஸ்மா XII - D**

### மழலைகளின் கைவண்ணம்




S. Mohamed Ayaan
I STD



Suhaib
II STD



A.Unais
III STD



A. Nafeesa
IV STD



A.Afiya
V STD

# இம்மாத நல்லொழுக்கப் பயிற்சியின் விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன

